# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,

# METTUPALAYAM

## DEPOSITION OF WITNESS

## O.S. 308/2018

## CNR.No.TNCB19000

Date: 17.03.2026 P.W.1

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | இந்திராணி | **வயது** | 62 |
| **த/பெ** | சுப்ரமணியன் | **வட்டம்** | மேட்டுப்பாளையம் |
| **விலாசம்** | ப ட்டக்காரம்பாளையம் | **மாவட்டம்** | கோவை |
| | | **தொழில்** | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 17th March 2026

வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பாகம் கேட்டு வழக்கறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை. என் அண்ணன் முத்துசாமி க்கு அறிவிப்பு அனுப்பினேன். சுலோச்சனாவிற்கு அறிவிப்பு அனுப்பினேனா என்றால் வழக்கு தாக்கல் செய்த பிறகு 1ம் பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்த பிறகுதான் 2ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் கொடுத்த விபரம் தெரியும். 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையின் விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனது தகப்பனார் மாதைய கவுடர் 23.01.1994 ம் ஆண்டில் இறந்து விட்டார் என்றால் சரிதான்.

எனது அப்பா இறந்து 24 ஆண்டு கழித்துதான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது அப்பா இறந்த பிறகு நாங்கள் மூவரும் கூட்டு சுவாதீனத்தில் இருந்தோம். தாவா சொத்தின் வருவாய் ஆவணங்கள் 2ம் பிரதிவாதியின் பெயரில் உள்ள விபரம் தெரியுமா என்றால் 1ம் பிரதிவாதியின் மகள் பெயருக்கு போன விபரம் எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையின் விபரம் எனக்கு தெரியாது. வழக்கு சம்பந்தமான விபரங்களை

வழக்கறிஞரிடம் யார் சொன்னார்கள் என்றால் எனது கணவர் உயிருடன் இருக்கும்போது சொன்னார். எனது கணவர் இருக்கும்போது வழக்கறிவிப்பு அனுப்பினேன்.

( வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதன்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

Sd/-K.Palanivel,

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.